**DEPOSITION OF WITNESS (Code of Civil Procedure)**

**IN THE COURT OF DISTRICT AND SESSIONS COURT,**

**COMMUNAL CLASH CASES, MADURAI**

**S.C. NO. 5 / 2010**

**அரசு தரப்பு சாட்சி** - 44

Name : ஜெயசுப்பிரமணியன்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Age :

Solemnly affirmed by Thiru.P.Ramakrishnan, Translator of this court in accordance with the provision of Oaths Act of the day of 18th September 2019.

**முதல்விசாரணை**

நான் தற்போது வேலூர் மாவட்டம் பெண்களுக்கு எதிரான குற்றப்பபுலான்ய்வு துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 15.02.2008 ம் தேதி செங்கோட்டை வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது சமயத்தில் தென்காசி நகரத்தில் நடந்த தொடர் குண்டு வெடிப்பு வழக்கில் எதிரிகளை கண்டுபிடிக்க அமைக்கப்பட்ட தனிப்படையிலும் ஆய்வாளராக பணிபுரிந்தேன். 15.2.2008 ம் தேதி காலை 9 மணிக்கு நான் எனது செங்கோட்டை வட்ட அலுவலகத்தில் அலுவலில் இருக்கும் போது தேன்பொத்தை கிராம நிர்வாக அலுவலர் திரு.வெள்ளைச்சாமி கிராம உதவியாளர் திரு.சுடலையாண்டி ஆகிய இருவரும் சிவா என்ற சிவானந்தம் த/பெ. ரத்தினசாமி, மாவடிக்கால் என்பவரை தனி அறிக்கையுடன் என்னிடம் ஆஜர்படுத்தினர். நான் தனிப்படையில் இருந்த காரணத்தினால் நிலைய அலுவலகத்தில் வைத்து மேற்படி கிராம நிர்வாக அதிகாரி அவர் உதவியாளரை சாட்சியாக வைத்து சிவா என்ற சிவானந்த்தை விசாரித்தேன். அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில்

பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி சிவா என்ற சிவானந்தம் தன்னை அழைத்து சென்றால் வெடி உப்பு வைத்துள்ள இடத்தை காட்டுவதாக சொன்னதன் பேரில் அன்று காலை 10.30 மணிக்கு தென்காசி - மதுரை ரோடு, சிவராம் பேட்டையில் கீழ் புற பாலத்திற்கு அடியில் இருந்து எடுத்து ஆஜர்படுத்திய 1) ரஜீர் டிரேடர்ஸ் கொல்லம், நாள் 28.9.2007 என்கின்ற 113 ம் எண்கொண்ட ரசீது-1 மற்றும் சுமார் 1 கிலோ எடையுள்ள மஞ்சள் நிறமுள்ள வெடி மருந்து உப்பு தூள் இருந்த பிளாஸ்டிக் கவர் இரண்டையும் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அது சா.பொ. 19 மற்றும் 20 ஆகும். கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.57 ஆகும். எதிரியை அழைத்துக் கொண்டு கேரளா மாநிலம், குடவட்டுர் என்ற இடத்தில் உள்ள ரஜீர் டிரேடர்ஸ் என்ற கடையை அடையாளம் காட்டினார். பிறகு மேற்படி எதிரியை தென்காசி காவல் நிலைய குற்ற எண். 107/2008, 108/2008 வழக்கின் புலன் விசாரணை அதிகாரியிடம் கைப்பற்றிய பொருட்கள் மற்றும் தனி அறிக்கையுடன் ஒப்படைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கு குற்றச் செயல் தொடர்பாக 24.01.2008 அன்று தனிப்படை அமைக்கப்பட்டது. இது தொடர்பாக காவல் துறை கண்காணிப்பாளர் தனி உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை என்றால், ஒரே உட்கோட்டமாக இருப்பதால் பிறப்பிக்கவில்லை. குண்டு வெடிப்பு நடந்த உடன் செங்கோட்டை காவல் நிலையத்தால் முதல் விசாரணை நடைபெற்றது என்றால், சரியல்ல. அதன் பிறகு இந்த வழக்கு குற்றலாம் காவல் நிலையத்தால் விசாரணை செய்யப்பட்டது என்றால், அந்த காவல் நிலைய காவல் ஆய்வாளர் தான் புலன் விசாரணை அதிகாரி என்பது எனக்கு தெரியும். எதிரி சிவா என்கின்ற சிவானந்தத்தை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளர் செங்கோட்டையில் உள்ள எனது அலுவலகத்திற்கு தான் அழைத்து வந்தனர். தனிப்படைக்கு என தனி அலுவலகம் கிடையாது. விசாரணை சமயத்தில் செங்கோட்டை

வட்ட ஆய்வாளராக இருந்தேன். மேற்கண்ட எதிரி கிராம நிர்வாக அலுவலரிடம் வாக்குமூலம் ஏதேனும் அளித்தாரா என்றால், ஆம். அந்த வாக்குமூலம் என்னால் பார்வையிடப்பட்டது. எதிரி சரணடைந்தவுடன் கிராம நிர்வாக அலுவலர் என்னை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்தாரா என்றால், இல்லை. கிராம நிர்வாக அலுவலர் எதிரியோடு தனது உதவியாளரை அழைத்துக் கொண்டு வந்தார். எந்த வாகனத்தில் வந்தார் என்று ஞாபகம் இல்லை. எதிரி காவல் நிலையத்திற்கு வந்தவுடன் எத்தனை நேரம் கழித்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றால், உடனடியாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலம் என்னால் கைப்பட எழுதப்பட்டது. காவல் நிலையத்திலிருந்து சான்றுபொருட்கள் கைப்பற்றப்பட்ட இடம் சுமார் 7 கீ.மீ தூரத்தில் உள்ளது. அந்த இடத்திற்கு அருகில் கிராமம் ஏதேனும் உள்ளதா என்றால், இல்லை. கைப்பற்றப்பட்ட இடத்தில் உள்ள பாலம் கீழ்பாலம் ஆகும், அங்கு மேம்பாலம் எதுவும் இல்லை. கீழ்பாலத்தில் தண்ணீர் செல்வற்கு ஏதுவாக பாதை உள்ளது. அது வட்டவடிவமா அல்லது சதுரமா என்று ஞாபகம் இல்லை. பாலத்தில் கிழக்குபுறம் உள்ள பகுதியிலிருந்து எதிரி சான்று பொருட்களை எடுத்து கொடுத்தார். அந்த நேரத்தில் அங்கு தண்ணீர் இல்லை அந்த பாலத்தில் எந்த புறம் இருந்து தண்ணீர் வரும் என்று தெரியாது. பாலத்திற்கு அடியிலிருந்து எதிரி எடுத்துக் கொடுத்தார். மண்ணை தோண்டி எடுக்கவில்லை, மண்ணிற்கு மேலிருந்து தான் எடுத்துக் கொடுத்தார். கைப்பற்றுதல் மகஜர் கையால் எழுதப்பட்டது. கிராம நிர்வாக அலுவலர் அதில் தேதி குறிப்பிட்டார். தனது அலுவலக முத்திரையை அவர் இடவில்லை. கைப்பற்றப்பட்ட இடத்திருந்தே கேரளாவிற்கு நேரடியாக போனோம். வேறு மாநிலத்திற்கு செல்வதாலும் மொழி பெயர்ப்பாளரை அழைத்துச் சென்றோமா என்றால், அந்த மொழி எனக்கு புரிந்து கொள்ளும் முடியும் என்பதால் மொழி பெயர்ப்பாளரை அழைத்து செல்லவில்லை. எனக்கு மலையாளம் பேச தெரியும். எழுத தெரியாது என்றால், சரிதான். அந்த கடையின் ரசீதுகள் மலையாளத்தில்

இருந்தன என்றால், பார்த்தால் தெரியும். ரஜீர் கடையை விசாரித்து விட்டு வேறு கடைகளை விசாரித்தேனா என்றால், இல்லை. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் எதிரி சிவா என்ற சிவானந்தம் கிராம நிர்வாக அலுவலரிடம் சரணடைய வில்லை என்றும் அவர் என்னிடம் எவ்வித ஒப்புதல் வாக்குமூலத்தையும் அளிக்கவில்லை என்றும், அதன் பேரில் நான் சான்றுபொருட்கள் எதையும் கைப்பற்றவில்லை என்றும், கைப்பற்றுதல் மகஜர் எதையும் நான் தயாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் கேரளா சென்று சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு
செய்யப்பட்டு வாசித்துக்காட்ட சாட்சியால் சரி
என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள்
விசாரணை நீதிமன்றம், மதுரை.